©
தமிழ்நாடு அரசு
2001

பதிவெண் :

# கரூர் மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

கரூர், செப்டம்பர் 24, 2001

[ புரட்டாசி 8, விசு, திருவள்ளுவர் ஆண்டு—2032 ] [ எண் 18

## உள்ளாட்சித்துறை அறிவிக்கை

**குடிநீர் கட்டணம் மற்றும் குடிநீர் வைப்புத்தொகையினை உயர்த்தி விதித்தல் குறித்த அறிவிப்பு**

குளித்தலை நகராட்சி

(ந. க. எண் 516/2000/அ1, நாள்: 29—8—2001)

(1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 309, 310 உட்பிரிவு (2) இன்கீழ் அறிவிப்பு செய்யப்பட்டது).

குளித்தலை நகராட்சி எல்லைக்குள் வீட்டு உபயோகம் மற்றும் வீட்டு உபயோகம் அல்லாத காரியங்களுக்கு தற்பொழுது விதித்து வசூலிக்கப்பட்டுவரும் குடிநீர் கட்டணம் மற்றும் குடிநீர் வைப்புத்தொகையினை உயர்த்தி விதிக்க இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண் 4, நாள்: 14—2—2000, தீர்மானம் எண் 223, நாள்: 26—5—2000, தீர்மானம் எண் 252, நாள்: 11—7—2000 மற்றும் தீர்மானம் எண் 317, நாள்: 26—9—2000 இல் ஒப்புதல் வழங்கியுள்ளது.

குளித்தலை நகராட்சி குடிநீர் விநியோகத்திற்காக, குளித்தலை பேரூராட்சியின் 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 180 பிரிவின்படியும், அதன்கீழ் பிறப்பிக்கப்பட்ட விதிகளின்படியும், குளித்தலை பேரூராட்சியின் 21—4—1975 ஆம் நாள் 192 ஆம் எண் தீர்மானத்தில் அங்கீகரித்திருப்பதையும், குடிநீர் வடிகால் வாரிய மதுரை வட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் தனது 14—8 1975 ஆம் நாள், ந. க. எண் 21/1618/172, 18, 14—8—1975 ஆம் நாள் ஒப்புதல் அளித்திருப்பதையும் அறிவிப்பு செய்யப்பட்ட துணைவிதி 9(எ) மற்றும் (பி), 11ஐ இந்நகர்மன்ற தீர்மான எண் 18, நாள்: 30-5—1994 இன்படி, மாதாந்திர குடிநீர் கட்டணத்தை உயர்த்தியும், பின்னர் மீண்டும் இந்நகர மன்ற தீர்மான எண் 232, நாள் 25—10—1995 இன்படி, குடிநீர் கட்டண இணைப்பு பெறுவதற்கான வைப்புத் தொகையை உயர்த்தியதையும், மீண்டும் தற்பொழுது விஸ்தரிக்கப்பட்ட கூடுதலாக குடிநீர் விநியோகப்பணி மேம்படுத்தல் திட்டத்திற்கான மதிப்பீட்டின், லாபகரமற்ற வரவு செலவு கணக்கின் அடிப்படையில் தற்பொழுது மீண்டும், மேற்கண்ட துணை விதிகளுக்கு திருத்தம்செய்து 1—10—2001 ஆம் நாள் முதல் அமுல்படுத்த உத்தேசித்த வரைவு துணை விதிகள் அறிவிப்பு செய்யப்படுகிறது. இதில் ஆட்சேபணை அல்லது ஆலோசனைகள் இருப்பின் எழுத்துமூலம் இவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட நாளில் இருந்து 30 நாட்களுக்குள் நகராட்சி ஆணையருக்கு தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

கீழ்க்கண்ட உயர்வுகளுக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் ந.க. எண் 4128/2000/குவ 2, நாள் 20—3—2001 செயல்முறையில் குடிநீர் கட்டணம் மற்றும் குடிநீர் வைப்புத்தொகையினை உயர்த்தி வசூல் செய்துகொள்ள அனுமதி வழங்கியுள்ளார்கள். இதனை குளித்தலை நகர்மன்றம் தனது தீர்மானம் எண் 518, நாள்: 25—4—2001இல் 1—10—2001 ஆம் நாள் முதல் உயர்வுசெய்ய தீர்மானிக்கப்பட்டது.

குளித்தலை நகராட்சியினால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள மற்றும் தற்பொழுது புதிதாய் வழங்கப்படும் வீட்டு உபயோகம் குழாய் இணைப்புக்காக மற்றும் வீட்டு உபயோகமில்லாத பிற பயன்பாடுகளுக்கான குழாய் இணைப்புகள் ஆகியவற்றிற்கு கீழ்க்கண்டவாறு தண்ணீர் கட்டணம் வைப்புத்தொகை செலுத்தப்படவேண்டும்.

| தற்பொழுது நடைமுறையில் உள்ள கட்டண விகிதங்கள். | 1—10—2001ஆம் நாள் முதல் அமுல் படுத்தப்பட்ட கட்டண விகிதங்கள். |
|---|---|
| (1) | (2) |
| 1. வீட்டு உபயோகம்— | 1. வீட்டு உபயோகம்— |
| (அ) குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ. 24 | (அ) குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 |
| (ஆ) குடிநீர் வைப்புத்தொகை ரூ. 1,000 | (ஆ) குடிநீர் வைப்புத்தொகை ரூ. 4,000 |
| 2. வணிக உபயோகம்— | 2. வணிக உபயோகம்— |
| (அ) குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ. 108 | (அ) குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ. 200 |
| (ஆ) குடிநீர் வைப்புத்தொகை ரூ. 2,000 | (ஆ) குடிநீர் வைப்புத்தொகை ரூ. 8,000 |
| 3. தொழிற்சாலை உபயோகம்— | 3. தொழிற்சாலை உபயோகம்— |
| (அ) குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ. 108 | (அ) குடிநீர் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ. 250 |
| (ஆ) குடிநீர் வைப்புத்தொகை ரூ. 3,000 | (ஆ) குடிநீர் வைப்புத்தொகை ரூ. 10,000 |

மேலும், குடிநீர் கட்டணத்தை ஆண்டுக்கு 5 சதவீதம் உயர்த்தி வசூல் செய்யப்படும் என்பதையும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த முன் வைப்புத்தொகைக்கு எந்தவித வட்டியும் வழங்கப்படமாட்டாது. மேலும், குழாய் இணைப்பே தேவையில்லை என்று உரிமையாளரின் கோரிக்கையின்பேரில், நிரந்தரமாக குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்போது கேட்பின்பேரில் குடிநீர் கட்டணம் நிலுவை ஏதேனும் இருந்தால், அதனைப் பிடித்தம் செய்துகொண்டு, இத்தொகை திரும்ப வழங்கப்படும். ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு செலுத்தப்பட்ட காப்புத்தொகைபோக மீதித் தொகையை நான்கு காலாண்டுகளில் வசூலிக்கப்படும்.

மேற்கண்ட அறிவிப்பின்பேரில், நகர்மன்ற தீர்மானம் எண் 558, நாள் 17—7—2001 மற்றும நகர்மன்ற தீர்மானம் எண் 588, நாள் 13—8—2001இல் ஒப்புதல் அளித்ததின்படி, மேற்கண்ட கட்டண விகிதம் மற்றும் வைப்புத்தொகைகள் உயர்வு மற்றும் ஏற்கனவே உள்ள குடிநீர் இணைப்புதாரர்களிடமிருந்து வைப்புத்தொகை உயர்வால் வித்தியாசத்தொகை வசூல்செய்தல் ஆகியவை ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

சோம. சுவாமிநாதன்,
ஆணையர்,
குளித்தலை நகராட்சி.

குளித்தலை,
2001 ஆகஸ்ட் 29.

... பொறுப்பாளர் அச்சுத்துறை இயக்குநரால் திருச்சிராப்பள்ளி அரசினர் கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.